# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC - 161 of 2025

## வழக்கு சாட்சி:PW - 1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஸ்டீபன் | தேதி : | 18.08.2025 |
| தந்தை பெயர்: | ஆரோக்கியம் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(2ம் எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 18.08.2025.

**முதல் விசாரணை**

நான் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு அருகில் உள்ள பேரை என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து பணி நிறைவு பெற்றுள்ளேன். நான் மூன்றடைப்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 15.03.2015 ம் தேதி இரவு 9.30 மணிக்கு மேல் பானான்குளம் NH ரோட்டிற்கு மேல் பக்கம் உள்ள ராணி ஹோட்டல் உரிமையாளர் கொம்பையாவை முன்விரோதம் காரணமாக பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய நான்கு நபர்கள் வெட்டி கொலை செய்தது சம்மந்தமாக சரகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை வராமல் இருக்க மூன்றடைப்பு பஜாரில் நானும் என்னுடன் தமிழ்நாடு சிறப்பு காவல் 9th பெட்டாலியன்

காவலர்கள் PC 752 திரு பாலசுப்பிரமணியன், திரு கனிராஜ் PC 759 ஆகியோர்களுடன் மூன்றடைப்பு பஸ் ஸ்டாப்பில் பணி நிமித்தமாக நியமிக்கப்பட்டோம். கடந்த 18.03.2015 ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் மூன்றடைப்பு காவல் நிலையத்தில் சரித்திர பதிவேடு உள்ள பாணான்குளத்தை சேர்ந்த சுடலைக்கண்ணுத்தேவர் மகன் முத்தையாவும், அதே ஊரை சார்ந்த கொம்பையா தேவர் மகன் முத்துவும், வெங்கடாச்சல தேவர் மகன் ஊசை காளி முருகனும், TN 76 A 1585 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மூன்றடைப்பு பஸ் நிறுத்தத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு முத்தையா கையில் அரிவாளுடன் என் அருகில் வந்து ஏல தேவடியா பசங்களா, தாயோழிகளா என் ஜாதி காரன வெட்டி கொன்னதுக்கு அவனுங்கள பிடிக்காமல் இங்க இருந்து கொண்டு சுன்னியவா ஊம்புறீங்க என்று அசிங்கமா பேசியும் என் ஜாதி காரன் பஸ் கண்ணாடிய உடைத்ததற்கு ஏன் விரட்டி விரட்டி அடிக்கிறீர்கள் என்று சொல்லி கொண்டு கையில் இருந்த அரிவாளால் என்னை வெட்டினான் நான் சுதாரித்து கொண்டு இடது கையால் தடுத்தேன். அது எனது இடது கை ஆள்காட்டி விரலுக்கும் சுண்டு விரலுக்கும் இடையே பட்டு இரத்த காயம் ஏற்பட்டது. மீண்டும் அவன் என்னை பார்த்து நாடார் ஜாதியினரை வெட்டி கொல்லவேண்டும் என்று எங்கள் ஜாதி பெண்கள் சொன்னதற்கு அவர்கள் மீது கேசாடா போட்டீர்கள் தாயோழிகளா இத்தோடு தொலைந்து போங்கள் என்று சொல்லிகொண்டு அரிவாளால் எனது தலையில் வெட்டினான். அந்த வெட்டு என் தலையின் இடது பக்கத்தில் பட்டு இரத்த காயம் உண்டானது. இதை பார்த்த என்னுடன் பணி செய்த காவலர்கள் 752 , 759, ஆகியோர்கள் மேற்படி என்னை வெட்டிய நபர்களை பிடிக்க முயற்சிக்கும் போது என் கிட்ட வந்தா உங்களையும் வெட்டி கூறு போடுவேன் என்று சொல்லி கொண்டு என்னை வெட்டிய அரிவாளுடன் அவர்கள் வந்த இரு சக்கர வாகனத்தில் ஏறி சென்று விட்டார்கள். இதை பார்த்த அக்கம் பக்கத்தில்

உள்ளவர்களும், என்னுடன் பணியில் இருந்த காவலர்களும் சேர்ந்து மூன்றடைப்பு காவலர் 1347 மெர்லின் ஆகியோர்களும் என்னை மூன்றடைப்பு முப்பிடாதி வண்டியில் ஏற்றி திருநெல்வேலி அரசு மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். நான் தற்போதும் சிகிச்சையில் இருக்கிறேன். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். படித்து பார்த்து நான் சொன்னபடி சரியாக இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆகும். என்னிடம் காட்டப்படும் வெட்டருவாள்தான் எதிரி என்னை வெட்டிய அரிவாள் ஆகும். அது சா.பொ.1 ஆகும். எதிரிகள் வந்த TN 76 A 1585 என்ற பதிவெண் கொண்ட TVS இரு சக்கர வாகனம் சா.பொ.2 ஆகும். மேற்படி சா.பொ.1, சா.பொ.2 வழக்கு சொத்துக்கள் இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். வெட்டுபட்ட பின்பு என்னால் கையை தலையில் வைத்து படுக்க முடியாது. காது சரியாக கேட்கவில்லை. இப்பவும் அந்த இடம் கை வைத்தால் வலிக்கிறது.

**குறுக்கு விசாரணை** :

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பட்டியல் சாட்சி 1 முதல் 3 வரையிலானவர்களை ஒரே நேரத்தில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி கால அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை (DEFER) ஒத்திவைக்கப்படுகிறது.